STC.No. 1190/2023
நாள் 19.01.2026.
D.W.1 – (பாரதி)
புகார்தார் ஆஜர். எதிரி ஆஜர்.
புகார்தார் தரப்பில் **குறுக்கு விசாரணை**

பு.சா.ஆ.1 காசோலை நான் புகார்தாரருக்கு கொடுத்தது என்றால் என்னுடைய காசாலை தான். என் மாமியாருக்காக கொடுத்தேன். பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் ஆம், நான் வெற்று காசோலையாக கொடுத்தேன். அந்த காசோலை என் வங்கியில் போதிய பணமில்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் சரி. புகார்தாரர் காசோலை திருப்பப்பட்டது குறித்து ஒரு சட்ட அறிவிப்பி அனுப்பினார் என்றாலும் அவருக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரி. நாங்கள் காசோலையை புகார்தாரரிடம் கேட்டபோது வழக்கறிஞரிடம் கொடுத்திருப்பதாகவும், வாங்கி கொள்வதாகவும் சொன்னதால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. நான் 01.05.2022 ம் தேதி புகார்தாரரிடம் புரோநோட்டு கடன் ரூ.9 லட்சம் வாங்கியிருந்த கடனை தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட காசோலை திருப்பப்பட்டதாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புரோநோட்டு கடனை வசூல் செய்ய வேண்டி திருவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.115/2024 என் மீது தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் ஆம்.

எ.சா.ஆ.3 என்னுடைய SBI வங்கி, சிவகாசி பிரதான கிளையில் இருந்து புகார்தாரருக்கு 2 தவணையாக ஜிபே மூலமாக ரூ.59,000/– அனுப்பியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. எ.சா.ஆ.4 என்னுடைய மற்றும் என்னுடைய மனைவியின் பெயரில் உள்ள கூட்டு வங்கி கணக்கு SBI வங்கி, சிவகாசி பிரதான கிளையில் இருந்து புகார்தாரருக்கு 4 தவணையாக ஜிபே மூலமாக ரூ.78,500/– அனுப்பியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. எ.சா.ஆ.6 என்னுடைய மனைவி பெயரில் உள்ள SBI வங்கி, சிவகாசி பிரதான கிளையில் இருந்து புகார்தாரருக்கு ஜிபே மூலமாக ரூ.10,000/– அனுப்பியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி.

எ.சா.ஆ.7 என்னுடைய HDFC வங்கி, சிவகாசி பிரதான கிளையில் இருந்து புகார்தாரருக்கு 3 தவணையாக ஒரே தேதியில் ஜிபே மூலமாக ரூ.47,800/– அனுப்பியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. நான் புகார்தாரருக்கு அனுப்பிய மேற்படி தொகைகள் அனைத்தும் நான் புகார்தாரரிடம் நட்பு ரீதியில் அவ்வபோது வாங்கிய தொகை திருப்பி அனுப்பிய தொகை என்றால் சரியல்ல. தாவா காசோலை 01.05.2022 அன்று வழங்கப்பட்டது என்றாலும் அந்த கடனை தீர்ப்பதற்காக 04.08.2022 என்று தேதியிட்ட தாவா காசோலை வழங்கினேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு கடனிற்கும் நான் ஏற்கனவே புகார்தாரருக்கு செலுத்திய பணத்திற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எ.சா.ஆ.5 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, சிவகாசி கிளை வங்கி கணக்கில் இருந்து புகார்தாரரின் மகள் சுபஸ்ரீ வங்கி கணக்கிற்கு ரூ.45,000/– 2 தவணையாக அனுப்பியுள்ளேன் என்றால் சரி. அந்த தொகை நான் சுபஸ்ரீ என்பவரிடம் நான் தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனை திருப்பி செலுத்த அனுப்பியுள்ளேன் என்றாலும் அந்த கடனிற்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என் மாமியார் பெயர் இராமலட்சுமி. என் மாமியாரின் உடன்பிறந்த தங்கை பெயர் கஸ்தூரி. எ.சா.ஆ.8 கஸ்தூரியின் SBI வங்கி விருதுநகர் கிளையில் கணக்கு

பட்டியலின் படி கஸ்தூரி ரூ.5 லட்சத்திற்கு சுபஸ்ரீக்கு காசோலை கொடுத்து அந்த காசோலை வசூலாகியுள்ளது என்றால் சரி. அந்த தொகையானது கஸ்தூரி என்பவர் சுபஸ்ரீ என்பவரிடம் தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனை திருப்பி செலுத்த வழங்கப்பட்ட காசோலை என்றால் சரியல்ல. கஸ்தூரி சுபஸ்ரீக்கு கொடுத்த ரூ.5 லட்சம் தொகைக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கஸ்தூரி சுபஸ்ரீக்கு ரூ.5 லட்சம் எதற்காக கொடுத்தார் என கஸ்தூரியை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரியல்ல. அவருடைய அக்காவின் கடனிற்காக அந்த தொகையை கொடுத்தார். அந்த விபரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் கஸ்தூரியை விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் ஆம், தேவைப்பட்டால் விசாரிக்க தயாராக உள்ளேன். கஸ்தூரியை விசாரிக்காமல் கஸ்தூரியின் வங்கி கணக்கு பட்டியலை நான் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

கஸ்தூரி தற்போது திருவில்லிபுத்தூர் தமையை எழுத்தராக வேலை பார்த்து வருகிறார் எந்த நீதிமன்றம் என்று எனக்கு தெரியாது. கஸ்தூரி புகார்தாரரிடம் ரூ.3 லட்சம் கடன் வாங்கியதை திருப்பி செலுத்ததால் கஸ்தூரிக்கு எதிராக திருவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.243/2024 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் ஆம். நான் புகார்தாரரிடம் வாங்கிய கடனை மோசடி செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 2017ம் ஆண்டு என் மாமியார் இராமலட்சுமி புகார்தாரரிடம் வாங்கி கடனிற்காக பூர்த்தி செய்யாத புரோநோட்டு மற்றும் பூர்த்தி செய்யாத தாவா காசோலையை நான் வழங்கியதாகவும், கஸ்தூரி பூர்த்தி செய்யாத புரோநோட்டு செக்யூரிட்டிக்காக வழங்கியதாகவும், பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா காசோலை மற்றும் புரோநோட்டு செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்டதாக கூறி புகார்தாரருக்கு சட்ட அறிவிப்பு எதும் அனுப்பவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் புகார் எதும் கொடுக்கவில்லை என்றாலும் சரி. என் மாமியாரும் புகார்தாரரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் நம்பிக்கையின் அடிப்படையில் புகார் கொடுக்கவில்லை.

என் கட்சி விபரங்கள் என் வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். என் முதல் விசாரணையில் 2017ம் ஆண்டு என் மாமியார் கடனிற்காக வெற்று புரோநோட்டு மற்றும் வெற்று காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் புகார்தாரரை என் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது 2018ம் ஆண்டு என் கடனிற்காக வெற்று புரோநோட்டு மற்றும் காசோலை வழங்கப்பட்டதாக நான் வழக்காடி வருகிறேன் என்றால் நான் என் முதல் விசாரணையில் சொன்னதுதான் சரி. நான் இந்த வழக்கில் முன்னுக்கு பின் முரணாக நீதிமன்றத்தில் பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா காசோலை தொகை சட்டப்படி புகார்தாரருக்கு செலுத்த கடமை பட்டவன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.